அதை உடனடியாக முடிப்பதற்கு ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலை மலைப் பாதை ஆகும். இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரும் டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாதை பஸ் ரூட் அல்ல. இந்தப் பாதை 8 கிலோ மீட்டர். ஒரு கிலோ மீட்டர் இன்னும் அமைக்கப்பட வேண்டும். அது முடிக்கப்பட பஞ்சாயத்து யூனியன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இதுபற்றி பரிசிலனை செய்ய தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அறிக்கை கிடைத்ததும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அந்தப் பாதையில் பஸ் போக்கு வரத்து இல்லையென்றாலும், பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 6 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கேட்டு, கலெக்டர் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார். அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டால், அங்கே பஸ் விடுவதற்கு அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலைக்கு 3¼ லட்சம் ரூபாய் செலவாகும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். அதை மறுபரிசிலனை செய்வதற்காக திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அறிக்கை வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருப்பூர் கோட்ட அலுவலகம்

* 105. வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சிப் பகுதியாகிய பல்லடம் தாலுக்காவில் குளம் குட்டைகள் அமைப்பதற்காக பணியாற்றிய P.A.P. Assistant Engineer. திருப்பூர் டிவிஷனை பொங்கலூர் டிவிஷனுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Promotion for Draftsmen

* 106 *Q.*—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Second Grade Draftsmen in the Public Works Department who were transferred from the former